# Forum of BSNL Unions / Associations

## தமிழ் மாநிலம்

அன்பார்ந்த தோழர்களே,

05.12.2014 அன்று Fourm of BSNL Unions / Associations, தமிழ் மாநில அளவிலான கூட்டம் சென்னையில் தோழர் S.சுந்தரகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு வந்தவர்கள் அனைவரையும் வரவேற்று, “BSNL புத்தாக்கம்” சம்பந்தமாக அகில இந்திய அறைகூவல்களை Forum கன்வீனர் தோழர் S.செல்லப்பா விளக்கினார். NFTE மாநிலச் செயலர் தோழர் R.பட்டாபிராமன், SNEA(I) மாநிலச் செயலர் தோழர் M.கோபிநாதன், AIBSNLEA மாநிலச் செயலர் தோழர் S.சிவக்குமார், TEPU மாநிலச் செயலர் தோழர் A.செல்லப்பாண்டி, AIGETOA சார்பாக தோழர் K.செந்தில் குமார் மற்றும் FNTO சார்பாக தோழர் S.பார்த்திபன் ஆகியோர் கலந்து கொண்டனர். அகில இந்திய அளவில் Forum எடுத்துள்ள முடிவுகளை அமலாக்குவது குறித்து விவாதிக்கப்பட்டது. இறுதியில் கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

- 11.12.2014 அன்று ”கோரிக்கை தினம்” மற்றும் ஆர்ப்பாட்டத்தை தமிழ் மாநிலம் முழுவதும் வெற்றிகரமாக நடத்துவது.
- 11.12.2014 முதல் “மக்கள் சந்திப்பு இயக்கத்தை” வெற்றிகரமாக நடத்தி ஒவ்வொரு BSNL ஊழியரும் குறைந்தபட்சம் 50 கையெழுத்க்களைப் பெற்று ஒரு கோடி கையெழுத்து இலக்கிணை எட்டுவது.
- 2015, ஜனவரி மற்றும் பிப்ரவரி ஆகிய மாதங்களில் மாநில அளவிலான கருத்தரங்குகளை வெற்றிகரமாக நடத்தி ஊழியர்கள் மற்றும் பொது மக்களிடம் நமது கோரிக்கையை விளக்குவது.
- 25.02.2015 அன்று பாராளுமன்றம் நோக்கி பேரணியில் தமழகத்திலிருந்து ஒவ்வொரு சங்கத்திலிருந்தும் பிரதிநிதித்துவம் படுத்துவது.
- 17.03.2015 முதல் நடைபெற உள்ள காலவரையற்ற வேலை நிறுத்தத்தை முழுவீச்சில் 100% ஊழியர்கள் பங்கேற்புடன் வெற்றிகரமாக்குவது.

மாவட்ட அளவில் Forum கூட்டத்தை கூட்டி மேற்கண்ட முடிவுகளை மாவட்ட மட்டத்தில் வெற்றிகரமாக அமலாக்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

தோழமையுடன்

| | | |
|---|---|---|
| R.பட்டாபிராமன் | S. செல்லப்பா | A.பாபு ராதாகிருஷ்ணன் |
| Froum தலைவர் & மாநிலச் செயலர், NFTE | Forum கன்வீனர் | மாநிலச் செயலர், BSNLEU |

| | | | |
|---|---|---|---|
| M.கோபிநாதன் | S.சிவக்குமார் | A.செல்லப்பாண்டி | K.செந்தில்குமார் |
| மாநிலச் செயலர் | மாநிலச் செயலர் | மாநிலச் செயலர் | |
| SNEA(I) | AIBSNLEA | TEPU | AIGETOA |